செ.வெ.எண்: 337 நாள்: 08.06.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தைல மரக்கன்றுகளால் பாதிப்புகள் ஏற்பட்டால் சரிசெய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் ஆய்வு செய்து தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தின் சார்பில் நடப்பட்டுள்ள தைல மரக்காடுகளை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் இன்று (08.06.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமஸேவரி இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

பின்னர் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தின் சார்பில் யூக்கலிப்டஸ் எனப்படக் கூடிய தைல மரக்கன்றுகள் நட்டு வளர்த்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த தைல மரக்கன்றுகளால் பாதிப்புகள் ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்ததை தொடர்ந்து இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம், மணிப்பள்ளம் பகுதியில் கஸ்பா கிழக்கு காப்பு நிலப்பகுதியில் 56 ஹெக்டேர் பரப்பளவில் புதிதாக பயிரிடப்பட்டுள்ள தைல மர தோட்டங்களையும் பார்வையிடப்பட்டது.

மேலும் புதுக்கோட்டை வனச்சரகத்திற்குட்பட்ட முள்ளூர் பகுதியில் அமையப்பட்டுள்ள மத்திய நாற்றங்காலில் நடவு செய்யப்பட்டுள்ள தைல மரக்கன்றுகள் மற்றும் முந்திரி மரக் கன்றுகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. தைல மரக்கன்றுகளால் பொதுமக்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுவது உறுதி செய்யப்பட்டால் தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

வனத்தில் உள்ள வன விலங்குகளை பாதுகாக்கும் வகையில் வனவிலங்குகளுக்கு தேவையான உணவு, குடிநீர் போன்றவற்றை ஏற்படுத்தும்

வகையில் வனவிலங்குகள் வசிக்கும் இடங்களில் உணவு பயிர்களை பயிரிடவும், குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தண்ணீர் தொட்டிகள் அமைத்து சோலார் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வனத்துறையில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காட்டுத் தீயை கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வன விலங்குகள் வேட்டையாடுபவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், வன விலங்குகள் வேட்டையாடுவது குறித்து பொதுமக்கள் தகவல் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது முதன்மை தலைமை வனப் பாதுகாப்பாளர் (சென்னை) டாக்டர்.பி.துரைராசு இ.வ.ப., அவர்கள், தமிழ்நாடு வனத்தோட்ட கழக தலைவர் மற்றும் முதன்மை தலைமை வன பாதுகாப்பாளர் திரு.ரவிகாந்த்உபாதயா இ.வ.ப., அவர்கள், நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை வன பாதுகாப்பாளர் திரு.கே.வி.கிரிதர் இ.வ.ப., அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட வன அலுவலர் ஆனந்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**